பதிவு எண் : M. 6311 ★ தோலிபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை :7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்டி

மலர் : 15] சென்னை: கார்த்திகை 26ஆ (12—12—67) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 27ஆ (13—12—67) புதன் [இதழ்: 150

தமிழ்க் குடிமகனுக்கு வந்த இந்திக் கடிதம்

சென்னை, டிச. 11—1963-ல் தமிழகத்தில் உள்ள ஒருவருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து இந்தியில் எழுதப்பட்டு வந்த ஒரு கடிதத்தை இன்று மக்களவையில் பேராசிரியர் அன்பழகன் காட்டினார்.

அதில் எழுத்துக்கள் மட்டுமின்றி எண்களைக்கூட இந்தியில் எழுதப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி, 'இது இந்திக்காரர்களுக்குச் சிரிப்புத் தன்மை இல்லாததையே காட்டுகிறது' என்று கூறினார்.

சின்கா விடும் புதிய கரடி!

வேறு வேலையாகச் சென்னைக்கு வந்திருக்கும் மத்திய சுகாதார அமைச்சர் சத்திய நாராயண சின்கா, மக்களவையில் விவாதத்தில் இருக்கும் மொழி மசோதாபற்றி சில கருத்துக்களைச் சொல்லப் புதிய பயம் ஒன்றைத் தந்திருக்கிறார்!

திருத்த மசோதாவில் இந்தி பேசும் மாநிலங்கள் தினிக்க விரும்பும் முக்கிய மாற்றங்களில் ஒன்று—

"இந்தி பேசும் மாநிலங்கள் மத்திய அரசுடன் மட்டுமல்லாது, இந்தி பேசாத மாநிலங்களுடனும் இந்தியில் மட்டுமே கடிதம் எழுதிக்கொள்ள உரிமை வேண்டும்; அதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பினை, கடிதங்களைப் பெறும் இந்தி பேசாத மாநிலங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும்"

என்பதாகும்.

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு வேலையை, 'அனுப்பும் முனை' செய்யவேண்டுமா—அல்லது, 'பெறுகின்ற முனை' செய்துகொள்ள வேண்டுமா என்ற ஒரு பிரச்சினை, இன்னும் விவாதத்தில் இருக்கிறது

இத்தகைய ஒரு நேரத்தில், திங்களன்று செய்தியாளர்களிடையே பேசியுள்ள சின்கா,

"பதில் வேண்டும் என்ற அவசியம் இருந்தால், இந்தி பேசும் மாநிலங்கள், இந்தி பேசாத மாநிலங்களுக்கு எழுதும் கடிதங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பினையும் உடன் வைத்து அனுப்பும்"

என்று கூறியுள்ளார்.

ஆங்கில மொழிபெயர்ப்பு, 'அனுப்பும் இடத்திலா—பெறும் இடத்திலா' என்று கேட்ட செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதுதான் சின்கா,

"பதில் வேண்டும் என்ற அவசியம் இருந்தால் ஆங்கில மொழிபெயர்ப்பு உடன் வரும்"

என அறிவித்திருக்கிறார்.

இரு அரசுகளுக்கிடையே உள்ள கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்துமே, பதில் எதிர்பார்த்தவைகளாகத்தான் இருக்கின்றன!

"பதில் தேவையில்லை; பார்வைக்காக (For Information) மட்டுமே" என்ற வரிகளில் உள்ள கடிதங்களும் உண்டு.

சின்காவின் கூற்றுப்படி பார்த்தால், 'பதில் தேவைப்படாத கடிதங்களெல்லாம், ஆங்கில மொழிபெயர்ப்புடன் வராது' என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது!

இந்தி மொழியில் வரும் அவற்றை, இந்தி மொழி பேசாத மாநிலங்கள் தெரிந்துகொள்வதெப்படி?

அப்படியானால், அதற்காகவென்று ஒரு மொழிபெயர்ப்புத்துறை அமைத்துத்தானே தீரவேண்டும்?

இன்னும் சிறிதுகாலம் போனால், 'உங்களிடம்தான் ஒரு மொழி பெயர்ப்புத் துறை இருக்கிறதே—அதையே இன்னும் சற்று விரிவாக்கிக் கொள்ளுங்கள்; ஏனெனில், நாங்கள் அனுப்பும் கடிதங்கள் எல்லாம் இந்தியில் மட்டும்தான் இருக்கும்' என்று கூறுவதற்கு ஆதாரமளிக்கலாமா?

ஏனெனில், சத்திய நாராயண் சின்கா, அதே பேட்டியில் மற்றோர் இடத்தில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார் :—

"மொழிபெயர்ப்பு வேலை, 'பெறுகின்ற முனை'யில் இருக்க வேண்டுமேன இந்தி ஆதரவாளர்கள் விரும்புவதன் காரணம், 'அனுப்பும் முனை'யில் இரட்டிப்பு வேலை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான்!"

இந்தியில் எழுதுபவர்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பினையும் அனுப்புவது இரட்டிப்பு வேலை என்றால், பெறுகின்ற இடத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் அதே வேலை இரட்டிப்பு சுமையாக இருக்காதா?

சின்கா சொல்லியிருக்கும் புதிய செய்தியிலிருப்பதற்கு வேறு பொருளுதான் என்ன?

"இந்தி பேசாதவர்களே இப்படியெல்லாம் குழப்பத்தில் ஆழ்த்தி—அந்தத் தெளிவின்மைக்கு இடையே காரியத்தை முடித்துக்கொள்ளும் போக்கு" என்பதான இதனைக் கருதவேண்டியுள்ளது!

இதன்தான், 'உள்ளிருக்கும் ஆபத்து' (இதே இதழில் வேறு இடம் பார்க்க) என்று அண்ணு அவர்கள் கருத்தறிவித்திருப்பதாகப் புதுடில்லிக்குத் திரும்பியுள்ள இரா. செழியன அவர்களும் கூறியிருக்கிறார்.

—எஸ். ஆர்.

இந்திக்கு என்றும் அடிபணியோம்!

இரண்டாந்தரக் குடிமக்களாக இருக்க ஒப்போம்!

நாடாளுமன்றத்தில் பேராசிரியர் க. அன்பழகன் முழக்கம்

புதுடில்லி, டிச. 11—

"இந்தியைத் தங்கள்மீது திணிக்க,இந்தி பேசாத மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்"

என்று நாடாளுமன்றத்தில் தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவின் முதல் வாசிப்பின் போது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு திரு. அன்பழகன் பேசுகையில்,

"மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் சட்டத்தைத் திருத்துவது ஒன்றே வழி என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கும் தி. மு. கழகம், தற்போதைய மசோதாவின் தன்மையைச் சிறிதும் குறைக்கச் சம்மதிக்காது"

என்றார்.

"இந்த மசோதா, இந்தி பேசாத மக்களுக்குப் பாதுகாப்பாகவே கொண்டுவரப்பட்டது என்பதை இந்தி ஆதரவாளர்கள் உணரவேண்டும்.

"இந்தியாவில் உள்ள எல்லா வட்டார மொழிகளும் சமமாக மதிக்கப்படவேண்டும். ஒரே ஒரு வட்டார மொழியை ஆட்சிமொழியாக்குவதன் மூலம், அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிவிடக் கூடாது"

என்று சுட்டிக்காட்டினார், அன்பழகன்.

அவர் ஒரு கட்டத்தில் மிகவும் உருக்கமாகப் பேசுகையில், அவையில் அமைதி நிலவியது.

தி. மு. க. உறுப்பினர்கள் காட்டிய அமைதி, இந்தி வெறியர்களுக்கு அமைதியாக இருக்கச் செய்தது.

"நாட்டின் ஒரு பகுதியினர் தங்கள் மொழியைத் திணிப்பதன் மூலம் மற்றொரு பகுதியினரை அடக்கியாள நினைக்கின்றனர். இந்தி பேசாத மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்க முடியாது"

என்று திரு. அன்பழகன் குறிப்பிட்டபோது, கேரளத்தைச் சேர்ந்த ஸ்ரீகண்டன் நாயர்,

"உத்தரப் பிரதேசமும், பீகாரும் எங்களை ஆள அனுமதிக்க மாட்டோம்"

என்று முழக்கமிட்டார்.

திரு. அன்பழகன் அவர்கள், மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இங்கிய யூனியனில் ஒவ்வொரு மாநிலத்துக்கும், அதிகப்படசமான தன்னுரிமை உண்டு; காட்டை ஆளுவதில் எல்லா வட்டாரங்களுக்கும் சமவுரிமை உண்டு; எனவே, மொழிப் பிரச்சினையில் இந்தி பேசும் மக்கள் பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் கடைபிடிக்க வேண்டும்.

இங்கியாவில் மட்டுமல்லாமல், மலேசியா, இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்ற கடல் கடந்த காடுகளிலும் தமிழ் பேசப்படுகிறது.

காந்தி, நேரு போன்றவர்கள் விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமைவகித்தார்கள் எனப் போற்றுகிறோம்.

வட மாநிலங்களில்தான இந்தி பேசப்படுகிறது—இந்தியா முழுவதிலும் அல்ல—என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

நேருவும் லாலபகதூரும் அளித்த உறுதிமொழியின் உணர்வை அரசு காப்பாற்றத் தவறிவிட்டது!

தற்போது நடக்கும் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்கும் —1965-ஆம் ஆண்டு தமிழ் (4-ம் பக்கம் பார்க்க)

உள்ளிருக்கும் ஆபத்து-- அண்ணு எச்சரிக்கை!



"இந்தி பேசாத மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே — இந்தி பேசாத மாநிலங்களுக்கும் இந்தி பேசும் மாநிலங்களுக்கும் இடையே உள்ள கடிதப் போக்குவரத்துகளுக்கு,

ஆங்கிலம் மட்டுமே

பயன்படுத்தப்பட வேண்டும்!

"'இந்தி பேசும் மாநிலங்கள், இந்தி மொழியில் கடிதப் போக்குவரத்து கொள்ளும்; இருந்தாலும், ஆங்கில மொழிபெயர்ப்பு உடன் வரும் அல்லது ஏற்பாடு செய்து கொள்ளலாம்"

என்ற பேச்சில் ஏதோ உட்பொருள் இருக்கிறது—ஆபத்து காணப்படுகிறது!

"இந்திப் பிரதி சரியான கருத்தா—மொழிபெயர்ப்பு சரியான கருத்தா—என்பன போன்ற விவகாரங்களெல்லாம் — சட்டப் பிரச்சினைகளெல்லாம் வேறு தோன்றும்!

"இதைத் தீர்த்து வைக்கும் அளவுக்கு நீதிமன்றங்களும், இந்தி பழகி பயிற்சி பெற்றிருக்கவில்லை!"

என்று அறிஞர் அண்ணு அவர்கள், மொழி மசோதா திருத்தச் சட்டதுக்குச் சில மாற்றங்கள் கோரப்படுவது பற்றி கருத்துத் தெரிவித்திருப்பதாகப் புதுடில்லி திரும்பியுள்ள கழக மக்களவை உறுப்பினர் இரா. செழியன், செய்தியாளர்களிடையே அறிவித்துள்ளார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன்எம்.ஏ.எல்.

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 26 (12—12—67) செவ்வாய்

கனிதான்---ஆலுல் நச்சுக் கனி!

"தலைமை அமைச்சரின் கவல்ல இந்தி பேசாத மக்கள்பால் இருக்க வேண்டும்; அவர்களுக்குத்தான் உறுதிமொழி தேவை. நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்கும் நேரத்தில் இந்தி பேசாத மக்களின் கருத்தையே முக்கியமாகக் கேட்டறிதல் வேண்டும்."

இந்தி மொழி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி என்ற அரசியல் சட்ட ஏற்பாட்டினுல், நேரடியாகவும் உடனடியாகவும் நீண்ட நெடுங்காலத்துக்கும், ஆட்சிமொழித் துறையில் ஏற்படக் கூடிய விளைவுகள் அனைத்தையும் இழந்து தவித்திடக்கூடியவர்கள் இந்தி பேசாத பகுதி மக்களேயாவர். இந்தி மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஆக்கினுல் ஏற்படக்கூடிய கேடுகள் அனைத்தும், இந்தி பேசாத பகுதி மக்கள் மீதே சுமரும்.

இப்படி ஆட்சிமொழித் துறையில் ஏற்படக்கூடிய பெருந் தாக்குதல காரணமாக இந்தி பேசாத பகுதி மக்கள், இந்தி மொழியினரின் எடுபிடிகளாக—ஏவலர்களாக—கொத்தடிமைகளாக இருந்திட வேண்டும்.

இந்தி மொழி ஏகாதிபத்தியத்திடம் இந்தி பேசாத பகுதி மக்கள் சிக்கிச் சீரழிந்து, இரண்டாந்தரக் குடிமக்களாகக் காலம் கழித்திட வேண்டும்.

சுதந்தர இந்தியாவில், 'குடிமக்கள் அனைவரும் சமம்' என்ற அரசியல் சட்டக் கோட்பாட்டிற்கு முழு அளவில் விரோதமாக, இந்தி மொழியினர் நாடாளுகின்ற எசமானர்களாகவும், இந்தி பேசாதோர் அவர்களின் அடைப்பந்தாங்கிகளாகவும் காலம் கழித்திடுதல் வேண்டும்.

இத்தகைய பயங்கரமான அவல நிலையை னன்குணர்ந்த இந்தி பேசாத பகுதி மக்கள், 'இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழி' என்ற ஏற்பாட்டை முழுமூச்சாக எதிர்க்கத் துணிந்தனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தி மொழி ஆதிக்கத்துக்கு எதிராக அன்றும் இன்றும் கழகத் தலைவர்களும், தொண்டர்களும் தொடுத்த மொழிப் போர், தமிழக வரலாற்றில் ஒரு சிறப்புமிக்க அமைந்துவிட்டது.

தமிழக மக்கள் இந்தித் திணிப்புக்கு எதிராகக்களப்பிய போர்ப் புயல், இந்திய அரசைக் கண்விழிக்க வைத்தது. இந்தித் திணிப்பால், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகளை, இந்திய அரசு சிறிதளவே உணர்ந்துகொண்டது. இவ்வுணர்வின் விளைவுதான் காலஞ்சென்ற பண்டித நேருவின் உறுதிமொழி.

அவ்வுறுதிமொழிக்கு மீண்டும் உயிரூட்டினுர்—அவருக்குப் பின் தலைமை அமைச்சர் பொறுப்பேற்ற லால்பகதூர் சாஸ்திரி.

காலஞ்சென்ற தலைமை அமைச்சர்களான பண்டித நேருவும், லால்பகதூரும் தந்த வாக்குறுதி, இந்தி பேசாத பகுதி மக்களுக்கே அல்லாது, இந்தி மொழியினருக்கு அல்லவே அல்ல !

எனவே, இந்தி பேசாத பகுதி மக்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிக்குச் சட்ட உருவம் கொடுக்கத் துணிந்திருக்கின்ற இந்திய அரசு, இந்தி பேசாத பகுதி மக்களிடம் கலங்குகொண்டு—அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, தக்க சட்டத்தை இயற்ற வேண்டியது தான் தலையாய கடமை.

ஆனுல் இந்திய அரசோ, இந்தி ஏகாதிபத்தியவாதிகளின் மொழிவெறிக்கு இசைந்து கொடுத்து, இந்தி பேசாத பகுதி மக்களுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதியின் உறுதிமூச்சை ஒரேயடியாகச் சிதைத்துவிட முனைந்துள்ளது.

நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட உருவம் தருவது என்ற பெயரால், இந்திய அரசு இப்பொழுது நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதா, இந்தி பேசாத பகுதி மக்களின் அச்சத்தைக் கூர்ந்து, கோரிக்கையை முழு அளவில் நிறைவு செய்யக்கடியதலல.

அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதன்வாயிலாகத்தான், மறைந்தவர் தந்த வாக்குறுதிக்குப் பாதுகாப்புக் கிடைக்கக்கூடும். இதுதான் உண்மை; இதுவேதான் முன்னேற்றக் கழகத்தின் மூடிந்த கோரிக்கை.

இருந்திட்டாலும், இந்திய அமைச்சரவைக்கு இருந்திடக்கடிய வலிவுக் குறைவைக் கருத்தில் கொண்டு, 'இந்த நெருக்கடியான தருணத்தில் கிடைத்தஇதை பெற்றுக்கொண்டு, மேலும் விரும்பிய தைப் பெற முயற்சித்துவருவோம்' என்ற நலலுணர்வுடன், கழகம், நாடாளுமன்ற விவாதத்திலுள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதாவை, 'சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளலாம்' என ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

முன்னேற்றக் கழகத்தின் நில்ல இதுவாக இருந்திட, இந்தி மொழி வழிவந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்—அரசியல் கட்சி வேற்றுமைகளை ஒதுக்கிவைத்துவிட்டு—குறிப்பிட்ட மசோதாவின் உயிர்மூச்சை ஒழித்துக்கட்டும் திருத்தத்தைத் தந்திருக்கின்றனர்; அத்திருத்தத்துக்கு, தலைமை அமைச்சர் இந்திராவும் இசைவு தந்துள்ளார்களாம்.

குறிப்பிட்ட மசோதாவில், 'இந்தி பேசாத மாநில அரசுகளுக்கு அனுப்பப்படக்கூடிய அறிக்கைகள், கடிதங்கள், ஆணைகள் அனைத்துக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பப்படவேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; இந்த ஏற்பாட்டை, இந்தி மொழியினர், 'திருத்திவிட வேண்டும்' எனப் பிடிவாதம் காட்டுகின்றனர்.

மாநில அரசுகளுக்கு அனுப்பப்படக்கூடிய இந்தி மொழிக் கடிதங்களின், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொள்ளும் பொறுப்பை, 'இந்திக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்பதுதான், இந்தி வெறியர்கள் உணருவரா?

அண்ணவின் அபாய எச்சரிக்கை --- இந்தி வெறியர்கள் உணருவரா?

காவிரி நதிதீரத்தை கட்டாயப்படுத்த கங்கைக் கரையினருக்கு உரிமையில்லை!

'நேருவின் உறுதி மொழியைப் புறக்கணிப்போர் ஒருமைப்பாட்டுக்கு உலைவைப்போர் ஆவர்'---

அமைச்சர் கே. ஏ. மதியழகன் முழக்கம்

கோவை, டிச. 11—

"'இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் நீடிக்கும்' என்று தலைமையமைச்சர் நேரு உறுதி மொழி அளித்தார்; இந்த உறுதிமொழியில் இரண்டு அம்சங்கள் உண்டு; 'இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் நீடிக்கும்' என்பதில் மறைந்துள்ள பொருள், 'ஆங்கிலம் இருந்தது போதும்; இந்தியை ஏற்றுக்கொள்கிறேம்' என்று கூறும் அந்த இறுதி உரிமை, இந்தி பேசாத பகுதி மக்களுக்குத்தான் உண்டு; இந்தி பேசுவோருக்குக் கிடையாது' என்பதாகும்; இதை நாடாளுமன்றமோ, இந்தி வெறியர்களோ உணருவதாகக் காணுேம்!

"நேருவின் உறுதிமொழிப்படி, 'ஆங்கிலம் இனி எங்கள்குக் தேவையில்லே; இந்தியை ஏற்றுக்கொள்கிறேம்' என்று கூறும் உரிமை இந்திராவுக்கோ, சவானுக்கோ, மொராார்ஜிக்கோ, உத்தரப் பிரதேசத்துக் காரர்களுக்கோ, மத்தியப் பிரதேசத்துக்காரர்களுக்கோ இல்லே; அந்த உரிமை, காவிரி நதி தீரத்தில் வாழும் தமிழர்களுக்கும், கோதாவரி நதி தீரத்தில் வாழும் ஆந்திரர்களுக்கும், மற்ற இந்தி பேசாத மக்களுக்கும்தான் உண்டு!

"'இந்தப் பெரிய அம்சத்தைப் புறக்கணிப்பது, நேருவின் வாக்குறுதியைச் சுக்குநூறுகக் கிழித்துக் காற்றில் பறக்க விடுவதாகும்! கங்கையிலும், யமுனையிலும் கரைத்து விடுவதற்குச் சமமாகும்! இதைச் செய்பவர்கள் எவராயினும்—நேரு பெற்றெடுத்த இந்திரா காந்தியாயினும்—இந்தியத் திருநாட்டின் ஐக்கியத்திற்கு உலேவைப்பவராவார்கள்!"

இவ்வாறு, தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் டிச. 9-ல் கோவை சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற மாபெரும் வரவேற்பு—பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டினுர்.

ரோம் நகர் சென்று திரும்பிய அமைச்சர் மதியழகன் அவர்களுக்கு, கோவை மாவட்ட தி. மு. க. சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு, திரு. மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினர்.

அமைச்சருக்கு மலர் மாலே களும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் பொதுமன அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சி. பி. சிற்றரசு எம்.எல்.சி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருப்பூர் சு. துரைசாமி, பவானி ஏ. எம். இராசாம, ாரேரெடு மு. சினனசாமி, இரார. மாணிக்கவாசகம், கே. என். சோமிாதாசு, கருணாநதன், கே. கோவிந்தராசு, மற்றும் எஸ். ஏ. இராசமாணிக்கம், இராசு, தாய ணனி, பழனிசாமி, இராமசாமி, கண்ணப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள மு. இராமசாமி, வேலு, தொழிற்சங்கத் தலேவர் காட்டூர் கோபால, பி. எஸ். சானகிராமன், வழக்கறிஞர்கள சார்பில் க. ரர. சுப்பையர், மாணவர் தலேவர் சுஜாத்தனம், மகளிர் மன்றச் சார்பில் இராசம்மாள் ஆகியோர் பேசினார்.

வரவேற்புக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இத்தாலி நாட்டுப் பயணம்—இத்தாலியத் தொழிலாளர் முன்னேற்றம்—மிலான், வெனிஸ் நகர்களில் கண்ட காட்சிகள் ஆகியவற்றை விளக்கிவிட்டு, இந்திப் பிரச்சினையை பற்றிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

சொல்லவேண்டியது இனி ஏதுமில்லே!

இந்திய அரசியல் வானில் நம்மை அல்லக்கித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சிகை இந்திப் பிரச்சினையாகும்.

மொழிக் கொள்கையில் 4 கோடி தமிழ் மக்களின் மன உணர்வை எத்தனேயோ வடிவங்களிலும், எத்தனேயோ வழிகளிலும் வெளிப்படுத்தி விட்டோம்.

இனிப் புதிதாக இந்திய நாடாளுமன்றமோ, இந்தி வெறியர்களோ, இந்தியத் தலேமை யமைச்சரோ சொல்லவேண்டியது ஏதுமில்லே!

அரசுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்பதுதான், இந்தி வெறியர்கள் கோரும் திருத்தம்.

திருத்தத்தைப் பார்த்தால், அற்பமானதாகத்தான் தெரியும்; நுணுகி ஆராய்ந்தால்தான், அதிலுள்ள பயங்கரச் சதியை வினாங்கிக்கொள்ளுக முடியும்.

'இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடித்து இருக்கவேண்டும்' என்பு மறைந்த நேரு தந்துள்ள வாக்குறுதிக்குச் சட்ட உருவம் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு, அந்த வாக்குறுதியை ஒரேயடியாக உருகுலேத்துவிட இயற்றப்படுகின்ற சட்டமாக இம் மசோதா நிறைவேற்றப்படுகின்ற சதிச் செயலாகும்.

கனிதான்—ஆலுல் அதில் சுவை இருக்காது என்பதுடன், கொடிய நஞ்சாகவும் அது இருக்கும்.

சட்டப் புத்தகத்தில் சட்டமாக இருந்திடும்—ஆலுல் அந்தச் சட்டத்தால், எதிர்பார்க்கின்ற பலன் கடுகளவும் கிடைத்திடாது என்பதுடன், எதிரான கேட்டினேயும் செய்திடும்.

—கா. கி.

அறிஞர் அண்ணு ஆட்சிக்கு நாம் அளித்த மறுபெயர், 'இந்தி எதிர்ப்பு அரசு' என்பதாகும்.

தடுமாற்றம்--ஊசலாட்டம் பேராபத்தானதாகும்!

இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில், தலேமையமைச்சர் இந்திரா, ஆசைக்கும—அச்சத்திற்கும் இடையே ஊசலாடுகிறார்; 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்ற நியாயமான ஆசையும் இருக்கிறது; 'இந்தி வெறியர்கள் பதவியைத் தட்டிப் பறித்துக் கொள்வார்களே' என்ற அச்சமும் இருக்கிறது! இந்தத் தடுமாற்றமும் ஊசலாட்டமும், அரசியலிலே மிகுந்த பேராபத்தாகும்!

பெறவேண்டிய படிப்பினே நிறைய இருக்கிறது!

இப்போதுள்ள உண்மையான பிரச்சிகை, 'இந்தி மொழி பெரிதா? இந்தியாவின் ஒற்றுமை பெரிதா?' என்பதுதான்!

அறிஞர் அண்ணு அவர்கள், நானுகு காட்சிகளுக்குமுன், விருதுநகரில் ஆற்றிய உரையிலிருந்து தலேமையமைச்சர் இந்திரா பெறவேண்டிய பாடமும், படிப்பினேயும் நிறைய இருக்கிறது.

மிரட்டலுமல்ல--அச்சுறுத்தலுமல்ல!

அடக்கத்திற்கும் நிதானத்திற்கும் பெயர் போன அண்ணு அவர்கள், விருதுநகர் கூட்டத்தில், 'என்னேயே மீறி—எனக்குத் தமிழ் மக்கள் மீதுள்ள அன்புச் சக்தியையும் மீறி—நிலேமைகள் ஏற்படுமானுல், அதற்கு நான் பொறுப்பாளியல்ல' என்று கூறிய வாசகங்கள் மிரட்டலுமல்ல—பய முறுத்தலும் அல்ல! அது, இந்தி வெறியர்களுக்கு தமிழ் மக்களின் மனநிலேயைப் படம் பிடித்துக் காட்டும் அபாய விளக்காகும்!

தலேமையமைச்சர் இந்திரா, இதை எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதைத்தான் நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!"

தமிழ் வாழும் நாடுகளுக்குத் துதுவர்களாகத் தமிழர்

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் வற்புறுத்தல்

புதுடில்லி, டிச. 11—

"தமிழர்கள் பெரும அளவில் வாழும் நாடுகளில், தமிழ் தெரிந்தவர்கள், தூதுவர்களாக நியமிக்கப் படவேண்டும்" என்ற கோரிக்கையை, நாடாளுமன்றத்தில், வந்தவாசித் தொகுதி தி.மு.க. உறுப்பினர் கோ. விசுவநாதன், கேள்வியாக எழுப்பினர்; அது வருமாறு :—

கோ. விசுவநாதன் :—"தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளுக்குத் தூதுவர்கள் நியமிக்கப்படும் போது, தமிழ் தெரிந்தவர்களே நியமிப்பது பற்றிக் கவனிக்கப்படுமா ?"

பி. ஆர். பதத் :— "இது ஒரு யோசனையாகும்; ஏற்கனவே அந்தத் தூதுவர் அலுவலகங்களில் தமிழ் தெரிந்தவர்கள் பதவியில் இருந்துவருகிறர்கள்."

கோ. விசுவநாதன் :— "பதவியில் இருந்துவருகிறர்கள்; ஆனுல், தூதுவர்களாக அல்ல—எழுத்தர்களாக;"

ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டம்

டிச. 21 முதல் செயல்படத் துவங்கும்

அமைச்சர்கள் பலர் பங்கேற்கும் விழாவில் அண்ணா வழங்குகிறார்

சென்னை, டிச. 11—

நிலமற்ற ஏழை லிவசாயிகளுக்கு நிலம் வழங்கும் தமிழக அரசின் திட்டம், டிச. 21-ம் நாள் முதல் செயல்படத் துவங்கும்.

இத்துவக்கத்தினையொட்டி அன்றையத்தினம் முதலமைச்சர் அண்ணா அவர்கள், மற்ற அமைச்சர்களுடன், செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில், நிலமற்ற ஏழை லிவசாயிகளுக்கு 500 ஏகர் நிலத்தை வழங்குவார்.

'லிவினான ஆய்வுக்குப் பின், இத்திட்டத்திற்காக மதுராந்தகம் வட்டத்தில் 500 ஏக்கர் தரிசு நிலம் மேற்கொள்ளப்பட்டிருக் கிறதென்றும், அடக்கமான 'பிளாட்'டுகளாக 400 ஏகர் நிலம் 'பட்டா' செய்யப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்படுமென வும் தெரியவருகிறது.

எவருக்கும் புன்செய் நிலமானால் ஐந்து ஏகருக்கு மேலும், நன் செய் நிலமானல் இரண்டரை ஏகருக்கு மேலும் தரப்படமாட் டாது.

மதுராந்தகத்தில் அன்று, 'காட்டு வளப் பணி' பற்றிய பிரச்சாரத் துவக்கவிழா, மாவட்ட அளவில் நடைபெறுகிறது; அப் போது நிலம் வழங்கும் விழா, சிறப்புமிக்க தாக அமையும்.

இவ்விழா மட்டுமன்றி, இருபது ஆண்டுகளாகச் செங்கற்பட்டு மாவட்டம் பெற்றுள்ள முன்னேற் றத்தைக் காட்டும் கண்காட்சியும் இவ்விழாவில் இடம்பெறும்,

ஒவ்வொரு நாளும் தமிழக அமைச்சர்களில் ஒருவர், இங்கக் கண்காட்சியைப் பார்வையிடுவர்.

முதலமைச்சர் அண்ணா அவர் கள், டிச. 28-ம் நாளன்று கண்காட் சியைப் பார்வையிடுவார்.

வேளாண்மை, கால்நடை வளம், பொதுச் சுகாதாரம் ஆகிய துறை களில் ஏற்பட்ட முன்னேற்றம் சிறப்பாக இடம்பெறும்.

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

டிச. 14: காலை 9 மணி: ஆலங் குளம்; பகல் 12 மணி: அம்பா சமுத்திரம்—கல்யாணி திரைப் படக் கொட்டகைத் திறப்பு; மாலை 6 மணி: மதுரை மருத துவக் கல்லூரி குருட்டு புன ரமைப்பு நிலைய ஆண்டு விழா.

டிச. 15: காலை 8 மணி: மதுரை தேவதானத்தால் கட்டப்பட விருக்கும் கடைகளுக்கான இடம் பார்வையில்; பகல் 12 மணி: திருச்சி; மாலை 4 மணி: புத்த னம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டல்; மாலை 6 மணி: திருச்சி சேவுசாயி பொறியியல் நிலைய ஆண்டு விழா; இரவு 8 மணி: திருச்சி பொதுக்கூட்டம்.

டிச. 16: காலை 9-30 மணி: வண் ணத்தூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பும், தமிழ் மாநாட்டு நிதி வேபுவும்; 10-15 மணி: பெரிய பெறுதலும்; பொதுமக்கள் வர கெசனூர்—பொதுமக்கள் வர வேற்பும், தமிழ் மாநாட்டு நிதி பெறுதலும்; 11 மணி: கழுதூர் —பஞ்சாயத்து வரவேற்பு; தமிழ் மாநாட்டு நிதி பெறுதல்; 11-45 மணி: ஆவட்டி—ஆரம் பப் பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டல்; பிற்பகல் 12-15 மணி தொழுதூர்—பஞ்சாயத்து வர வேற்பு; தமிழ் மாநாட்டு நிதி பெறுதல்; ஆரம்ப ஆசிரியர் சங்கக் கட்டத்தில் சொற் பொழிவு; 2 மணி: எடச்செரு வாய்—ஆரம்பப் பள்ளிக் கட் டிடத் திறப்பு; 3 மணி: புலி வலம் பஞ்சாயத்து வரவேற்பு; பாலப் அடிக்கல் நாட்டல்; மாலை 4 மணி: திட்டக்குடி—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5 மணி: திட்டக்குடி பொதுக்கூட்டம்; இரவு 7 மணி: சிதம்பரம்— டாக்டர் சிதம்பரநாதனுர் இரங் கற் கூட்டம்; 10-30 மணி: விருத்தாசலம்.

டிச. 17: காலை 10 மணி: சேலம் சங்ககிரித் தொகுதி சுற்றுப் பயணம்.

கீலக்குழு முகவரி

பொ. தங்காசு,
38, லெட்சுமிபுரம் 7-வது தெரு, மதுரை-1.

தமிழக நகராட்சிகளின் புகழ்பெற்ற தலைவர்கள்

நகராட்சி நிர்வாகம் மிகச் சிறந்த நிர்வாகத் திறமை படைத்த பெரும் தலைவர்கள் பலரை இம் மாநிலத்தில் தோற்றுவித்துள் ளது.

'நகராட்சி மன்றத் தலைவர்கள்' என்ற வரிசையில் கோவை இரத்தினசபாபதி முதலியார், செங்கற்பட்டு வேதாசல முதலி யார், பாகாயங் கோட்டை டேனியல தாமஸ், திருச்சிராப் பள்ளி இரத்தினவேலுத் தேவர், மற்றும் அவர்களைப் போலவே புகழ்பெற்ற — திறமைவாய்ந்த தலைவர்கள் பலருடைய பெயர் களையும், அத்தலைவர்கள் நக ராட்சித் துறையில் ஆற்றியுள்ள பெரும பணிகளையும் நாம மறப் பதறகில்லை.

மதிப்பிற்குரிய இராஜாஜி அவர் கள் சேலம நகராட்சித் தலைவரா கத்தான் தமது அரசியல் வாழ்க்கையை ஆரமித்தார்.

சென்னை மாநகராட்சியின் தலைவ ராகத் திகழ்ந்த வெள்ளுடை வேந்தர் பி. தியாகராய செட்டி யாரை யாரால மறக்க முடியும்?

நகராட்சி மன்றத் தலைவர்கள் பலர் தமிழகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாகத் திகழ்கிறார் கள்; வேலூரைச் சேர்ந்த எம். பி. சாரதி, ஆரணி நரசிம மன், இராசகோபாலப் சுப்ப ராஜா, கும்பகோணம் காசி ராமன், திருப்பத்தூர் சின்ன ராசு, அருப்புக்கோட்டை சுந்தர பாரதி ஆகிய நகராட்சிமன்றத் தலைவர்களும், சென்னை மாநக ராட்சியின் மேயர் அப்புல்லா பேயக்கும் சட்டமன்ற உறுப் பினர்களாகவும் திகழ்வதைக் காண்கிறோம்.

தமிழக அரசின் பொதுச் சுகா தாரத் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா, உடுமலைப்பேட்டை நகராட்சி மன்றத் தலைவராக இருந்தவர்.

இறுதியாக, திருவில்லிபுத்தூர் நக ராட்சிமன்றத்துடன் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டு பணியாற்றிய சிவ காமிநாத பிள்ளையைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது; அவர் இக்கருந்தரங்கில் தமிழ கக் குமுவில் ஒரு பிரதிநிதியாக வும் உள்ளார் என்பதும் குறிப்பி டத்தக்கது.

--அமைச்சர் முத்துசாமி

—(நகராட்சி நிர்வாகக் கருத்தரங்கில்)

டயர்களுக்காக நான் செலவு செய்த பணம் எனக்கில் அடங்குமா? எனது லாபத்தையெல்லாம் அந்தப் பூதம் விழுங்கிக் கொண்டிருந்தது.

என்னுடைய நண்பர் கோவித்தன் மோட்டார்த்தொழிலில் முதிர்ந்த அனுபவமுள்ளவர். அவரிடம் கலந்து ஆலோசித் தேன். டயர்களை எங்கே ரீடிரெடிங் செய்கிறார்கள் என்று கேட்டேன். 'எங்கே செய்தால் என்ன? எல்லாருமே ஒரேமாதிரி தானே' என்றார்.

"அங்குதான் தவறு செய்கிறீர்கள். ரீடிரெடிங் நல்ல முறையிலும் செய்யலாம். மட்டமான முறையிலும் செய்ய லாம். எனவனுடைய அனுபவத்தில் எல்லோரும் ஒரே மாதிரி யல்ல என்பதைக் காண்பேன். விஞ்ஞான ரீதியில் ரீடிரெடிங் செய்வேசிடமே செலவு வேண்டும்...

...டிவிஎஸ் தான் தகுந்த இடம் என்பதைக் கண்டு கொண்டேன். அவர்கள் அப்படிக்கின்றி செய்கிறார்கள். கற் துண்டுகள், மண், சிறு கண்டைத்துண்டுகள் ஆணிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தி டயர்களுக்குத் தீங்கு நேரா மல் ரீடிரெடிங் செய்கிறார்கள். புதுமாடுமல்ல, காமல்போ ரப்பரை கொடமல் இருக்கும் பெருட்டு குளிர்ச்சான அறையில் வைத்திருக் கிறார்கள். மற்ற எந்த ரீடி ரெடிங்கைக் காட்டிலும் டிவிஎஸ் ரீடிரெட் செய்த டயர்கள் அதிகமைல்கள் உழைக்கின்றன" என்கிறார் கோவித்தன்.

"நான் ஒரு முறை டிவிஎஸ்லில்ரீடிரெடிங் செய்தேன். அது முதல் நான் வேறுயாரிடமும் சென்றதில்லை. டிவிஎஸ் ரீடி ரெடிங் மிகவும் சிறந்தது. ஆதலால் டயர்களை முன்னர் செலவு பார்த்ததேலே முறைகிறது."

உங்கள் டயர்களை டிவிஎஸ்லில் விஞ்ஞான ரீதியில் ரீடிரெடிங் செய்து நடைமுறைச் செலவைக் குறையுங்கள்

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

தொழிற்சாலைகள்: மன்னார்குடி - மேலமுத்தூர் - முசாஸ் புதுக்கோட்டை - செந்தலாபாத் - திருநெல்வேலி

கடவுளும் கடத்தல்பொருளாகிறார்

மதுரை வந்தடைந்த இரயில் பிரயாணி ஒருவரின் மூட்டையில் திருநெல்வேலிக்கு கோயில் ஒன்றினச் சேர்ந்த 'கடவுள் சிலை' ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

கடத்தியவர் ஒரு பெண்; போலீசார் அவளது வீட்டை மேலும் சோதனையிட்டதில், இதற்கு முன்னும் திருநெல்வேலி கோயில்களில் காணுமற்போன பல பொருள்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்திருக்கிறது.

பம்பாய் நில அதிர்ச்சி--அண்ணா துயரம்

சென்னை, டிச. 12—

பம்பாயிலும், மற்ற இடங்களிலும் ஏற்பட்ட நில அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கும் வகையில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள் :—

"பம்பாயிலும் மற்றும் சில இடங்களிலும் பயங்கர நில அதிர்ச்சிகள் ஏற்பட்டதால் நேர்ந்துள்ள துயரப்படக்கூடிய விளைவுகளை யறிந்து மிகவும் வருந்துகிறேன். பாதிக்கப்பட்டவர்கட்கு எனது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

சங்கரி இடைத்தேர்தல்

என். வி. நடராசன் அறிவிப்பு

சங்கரி தொகுதி இடைத்தேர்தலில், தி. மு. கழக வேட்பாளர் சி. வீரமணிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் பிற மாவட்டத் தொண்டர்களுக்கு அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது :—

"சங்கரி இடைத்தேர்தலில் பணியாற்ற விரும்பும் மற்ற மாவட்டக் கழகத் தொண்டர்கள், சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளருடனும் — சங்கரி தேர்தல் பணிக் குழுவுடனும் தொடர்புகொண்டு மாவட்டச் செயலாளரின் பரிந்துரை மடலோடு சங்கரிக்கு வரலாம்.

"இதற்கிடையே பிற மாவட்டங்களிலுள்ள கழகத் தொண்டர்கள் தேர்தல் பணியாற்றத் தங்களாகவே சங்கரிக்கு வர வேண்டாம்.

"பிற மாவட்டங்களிலிருந்து வரும் கழகத் தொண்டர்கள், தங்கள் பொறுப்பிலேயே எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொள்ள வேண்டும்."

வங்க அமைச்சரவையில் காங்கிரசு கூட்டு சேருமா?

மேற்கு வங்காளத்தில் டாக்டர் பி. சி. கோஷ் தலைமையிலான அமைச்சரவையில் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள் சேருவதை தலைமை அமைச்சர் இந்திரா காந்தி விரும்பவில்லை எனத் தெரிகிறது.

"மேற்கு வங்க மைனரிட்டி அமைச்சரவையை வெறுமென ஆதரிப்பதன் மூலம், காங்கிரசுக்கு இலாபமும் சரி—நஷ்டமும் சரி—ஏற்படாது; கோஷ் அமைச்சரவைக்கு கெட்ட பெயர் ஏற்பட்டால், அது அவருக்கே போய்ச் சேருமே தவிர, காங்கிரசுக் கட்சிக்கு 'வராது" என்று காங்கிரசு வட்டாரத்தில் கருதப்படுகிறது.

பக்தவத்சலம்

படித்துப் பார்க்கட்டும்!

1965-ம் ஆண்டில் இங்கே—தமிழ் நாட்டில்—ஒரு போராட்டம் நடந்தது!

இப்போதும் சில நாட்களாக உத்தரப் பிரதேசம், பீகார், புதுடில்லி ஆகிய இடங்களில் போராட்டம் நடைபெற்றது —நடைபெற்றுக் கொண்டும் வருகிறது!

இரண்டும் மொழிப் போராட்டங்கள்தான்!

தமிழ் நாட்டில் நடந்தது—

'இல்லாத இந்நியைப் புதிதாகத் தினிக்காதே'

என்பதற்காக!

ஆனால், அண்மையில் வடக்கே நடந்துவருவதோ,

'இதுவரை இருந்துவந்த ஆங்கிலத்தை அப்புறப்படுத்து'

என்பதற்காக!

இது, அவர்களுடைய நன்மைக்காக மட்டுமல்ல; 'ஆங்கிலம் இருந்தால், அது, இந்தி பேசாதவர்களின் நன்மைக்கு உதவி விடுமே' என்ற பொறுமையாலுமதான், 'அந்நிய மொழி வேண்டாம்' என்று சொலலிப் போராட்டம் நடத்துகிறார்கள்!

அங்கே எந்த நிகழ்ச்சியிலும் துப்பாக்கிப் பிரயோகம் இல்லே—உயிரிழப்பு இல்லே!

அங்கே நடந்திருக்கும் எந்த அமளிக்காகவும் இராணுவம் அழைக்கப்படவிலலே! 'மிஷின் கன்'களால் குண்டுகள், மழைபோல் பொழியவில்லே!

இது, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று! அங்கே நடந்த ஆங்கில எதிர்ப்புப் போராட்டம், 'வன்முறை இல்லாதது ஒன்று' என, எவரும் கூறிட இயலாது!

திருவாளர் சந்தேகம்

'மதராஸ் பள்ளி'க்கூடத்தைச் சேர்ந்த சின்னஞ் சிறு பிள்ளைகள்கூட மிரட்டப்பட்டிருக்கின்றனர்—தாக்கப் பட்டிருக்கின்றனர்! கழக எம்.எல்.ஏ.-க்கள் சென்ற கார் நிறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர் அவர்கள்!

கேவலம்—ஒரு பேனலில் இருந்த ஆங்கில வார்த்தைகளுக்காக ஒரு கத்திக்குத்து நடைபெற்றிருக்கிறது!

இப்படிப் பற்பல வகைகள்! பெரும்பாலும் இங்கெல்லாம், போலீசு, 'பார்வையாளர்'ராகவே இருந்திருக்கிறது! போராட்டக்காரர்கள் தாக்கப்படவில்லே! அடித்துத் துரத்தப்படவில்லே! ஏன்—பாராளுமன்றத்தின்முன் இருந்த ஆங்கில அறிவிப்புப் பலகையின் அப்புறப்படுத்தி நாசம் செய்யும்போதுகூட யாரும் ஏன்று தடுக்கவில்லே!

இதற்கெல்லாம் உச்சக் கட்டமாக—அங்கே உள்ள மாநில அமைச்சர்களே போராட்டத்துக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள் என்பது—இன்னும் விசேடமான செய்தி!

பீகார் அமைச்சர் ஒருவர், 'போராட்டம் இன்னும் வன்முறையாக இருக்கலாமே' என்று கருத்தறிவித்திருக்கிறார்! உத்தரப் பிரதேச அமைச்சர்கள், தலைமையமைச்சர் இல்லத்தின்முன் போராட்டமே நடத்தப் போகிறார்களாம்!

இப்படி அங்கு நடக்கும் மொழிப் போராட்டம், ஏதோ அவர்களுடைய 'குடும்பத்துப் பெருவிழா'வைப்போல கொண்டாடப்படுகிறது! அரசும், போலீசும், வெறும் பார்வையாளராக இருந்து மக்கள் கருத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன!

இதைப் பார்க்கும்போதுதான் நமக்கு 1965-ம் ஆண்டில் இங்கே நடந்த மொழிப் போராட்டம் நினைவுக்கு வருகிறது!

எத்தனைப் போலீசு!
எத்தனைப் பட்டாளம்!
எவ்வளவு துப்பாக்கிச் சூடு!
எவ்வளவு உயிரிழப்பு!

பக்தவத்சலத்தை, நாம் நினைத்துப் பார்க்க வேண்டாம்! வடக்கே நடக்கும் நிகழ்ச்சிகளை அவர் படித்துப் பார்க்கட்டும்!

—எஸ். ஆர்.

ஐந்து மாநிலங்களைப் பாதித்த நில அதிர்ச்சி

பம்பாய், டிச. 12—

நேற்று ஏற்பட்ட நில அதிர்ச்சி ஐந்து மாநிலங்களை பாதித்துள்ளது.

மகாராட்டிரம், குசராத், ஆந்திரம், மைசூர், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. பம்பாய், பூனு, ஐதராபாத், குசராத்மங்களூர், ஹுகேவா, தார்வார் ஆகிய நகரங்கள் பாதிக்கப்பட்டன.

கொய்னு நகரில் மட்டும் 170 பேர் மாண்டதாகவும், 1,600-க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், 5,000 பேர் வீடிழந்து விட்டதாகவும் செய்தி கிடைத்துள்ளது.

அந்த நகரமே பெரும்பாலும் அழிந்துவிட்டது.

கொய்னு ஆற்று நீர் விசை நிலையம் இயங்கமுடியாமல் நின்று விட்டது.

இந்தியாவின் மேற்குப் பகுதி நில அதிர்ச்சியால் பாதிக்கப்படக் கூடிய பகுதிதான் என்றும், இப்போதுதான் முதல் முறையாக இந்தகைய கடுமையான அதிர்ச்சியைக் கண்டது.

ஆகாசவாத்முதல் பெங்களூர் வரை—900 மைல் தொலைவுக்கு இந்த அதிர்ச்சி பரவியிருந்தது.

கொய்னு நகரின் 300 மைல் சுற்று வட்டாரத்தில் இந்த அதிர்ச்சி கடுமையாக இருந்தது.

சென்னை நகரிலும் நேற்று காலை 4-28 மணிக்கு நில அதிர்ச்சி பதிவு செய்யப்பட்டதாக மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையம் கூறுகின்றன.

உதகமண்டலத்திலும் நில அதிர்ச்சி ஏற்பட்டதாகப் புனு வானிலை ஆராய்ச்சி நிலையம் கூறுகிறது.

மின்சாரக் கட்டுப்பாடு

கொய்னு மின்சார உற்பத்தி நிலையம் இயங்காததால் மின்சாரம் பயனடுத்துவதைக் கட்டுப்படுத்தி மகாராட்டிர அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டு உத்தரவின் வினவாக, பம்பாய், புனு, தானு, நேஹ்ரூப்பூர் ஆகிய நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு ரூ. 2 கோடிக்குமேல் உற்பத்தி இறப்பு ஏற்படும்; ஏழு இலட்சம் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்க நேரிடும்; அவர்கள் சுமார் ரூ. 35 இலட்சமவரை ஊதியத்தை இழக்க நேரிடும்.

கொதிப்பு நிலை மறைந்தது--குதூகலம் நிரம்பி வழிந்தது!

கிருபாளனியின் சுவையூட்டும் பேச்சு!

நாடாளுமன்ற மக்களவையில், மொழி மசோதாமீது நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள், முதுபெரும் உறுப்பினர் ஆச்சாரியை கிருபளானிக்கு என்னவோபோல இருந்தது.

மொழிப் பிரச்சினை பற்றிய சர்ச்சைகளினுல், எல்லா உறுப்பினர்களும் 'குடாக்'கி தோற்றமளிதுதுக்கொண்டிருந்தது, கிருபளானிக்கு நன்ருக இல்லே; எனவே அவர், அவையில் கலகலப்பை ஏற்படுத்த விரும்பி, பின்வருமாறு பேசினுர் :—

"தாரகேசுவரி சின்காவின் பேச்சில் அரசியல் சரளத்தைக் காணேும்! சுசிலா நய்யாரின் எளிமை எங்கே! சுசேதாவின் (அவருடைய மனேவியார்தான்!) பேச்சில் இனிமையான வாதம் இல்லே!"

இதற்குப்பின் அவையின் கடுகுப்பு மறைந்து கலகலப்புத் தோன்றியது; கிருபளானி மேலும் பேசினுர் :—

"நம்மவர்களில் சிலர், கபடநாடகப் பேர்வழிகள்! பேசுவது ஒன்று செய்வது மற்றென்று! சொந்த விருந்து என்றல், 'மது' வகை பரிமாறப்படமாட்டாது! மற்றவர்களின் வீட்டில் விசேடம் என்றல், புட்டிக் கணக்கில் மது உள்ளே போகும்!

"பட்டம் – பதவிகளே இந்தியா விரும்புவதில்லே; ஆனல், இங்கே வழங்கப்பட்ட பெருமைக்கான பட்டம்– பதவிகளோ ஏராளம்! அதையும் இப்போது சிலர் திருப்பித் தருகிறார்களாம்! என்ன தியாகம்! ஆனல், பாவம்! அந்தப் பட்டங்களினுல் அவர்களுக்கும் பயனில்லே – பிறருக்கும் உபயோகமில்லே!"

திருமணம்

கழகச் சட்டமன்ற உறுப்பினர் ஆலடி அருணா அவர்களின் தங்கை செல்வி: இராமமூளுக்கும் — செல்வன்: தருமருக்கும் 14—12—67 காலை 7 மணிக்கு, ஆலடிப்பட்டி வைத்திலிங்கசாமி உயர் தொடக்கப் பள்ளியில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

தமிழகத்தில் தங்களைத் தாங்களே வருத்திக்கொள்ளக்கூடிய வழிகளில்—நெக்குளிப்புப் போன்ற நியாகங்களைச் செய்து—அறப்போர் நடத்தி இந்தியை எதிர்த்தார்கள்.

ஆனல், இப்போது, டில்லி மிலும் உத்தரப் பிரதேசத்திலும் நடக்கும் கிளர்ச்சிகள் வன்செயல்களைக் கொண்டவைகளாக உள்ளன! இந்தி பேசாத மக்கள் அச்சுறுத்தப் படுகிறார்கள்."

இராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.,அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடுபவராகவும், அச்சுப்பொறியாளராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24-ஆ, ஆர்மேனியன் ஸ்ட்ரீட்டில் செய்து, தென்னை மரவீதி, சென்னை-1-ல் இருந்து வெளியிடுகிறார்.